---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் 3.26 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல கூற்று தயாரிக்கும் போது காசு மற்றும் காசுக்க சமமானவைகளின் தேறிய குறைவு ரூபா 110,285,002 இருந்த போதிலும் தேறிய அதிகரிப்பு ரூபா 238,821,217 ஆகக் காணப்பட்டமையால் அதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தினடமிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல் வருமானம் ரூபா 4,799,664 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மிகையில் இனங்காணப்படாத மூலதன மானிய பெறுமதி ரூபா 62,693,978 உரிமை மூலதனமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 2,439,827 வாடகை வருமானம் விரிவான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வீதிகள், பாலங்கள், மதகுகள் மற்றும் அலுவலக உபகரணங்களில் பெறுமானத் தேய்வு முறையே ரூபா 734,391 குறைத்தும், ரூபா 94,876 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் இறுதி கணக்கன் மூலம் சரி செய்யப்படும். | மேற்படி |
| (ஈ) | கடன் கொடுத்தோருக்கு 7,387,186 ரூபா செலவினக்கணக்கில் வரவுவைத்த தவறை சரிசெய்யும் போது செலவினக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக இருப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | மேற்படி | மேற்படி |
| (உ) | பெறுமதி ரூபா 5,048,002 ஆன மூலதன கடன் கொடுத்தோர் மிகை ஒதுக்கீடு பதிவழிக்கும் போது உரிய நடைமுறை வேலைக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஊ) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தில் மேலதிகமாக செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணம் வட்டிப் பெறுமதி ரூபா 1,832,782 நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யவேண்டியிருந்த போதிம் தவணைப் பணப்பெறுமதி நீணடகால கடன் கணக்கில் வட்டிப் பெறுமதி செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (எ) | 03 நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வாக ரூபா 331,549 விரிவான செலவினத்தில் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

**1.6.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம்மற்றும் வருமான அறவிடல்களில் செயல் முன்னேற்றறிக் கையின் பிரகரம் ரூபா 6,273,321 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செயல் முன்னேற்ற அறிக்கையை திருத்தி சமர்ப்பிக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய சந்தை வியாபார நிலைய வாடகை மீதி நிதிக் கூற்றுக்களின் ரூபா 28,427,450 தொகை மற்றும் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 35,273,240 ஆனமையால் ரூபா 6,845,790 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | புதிவழிப்பதற்காக அனுப்பப்பட்ட மொத்தத் தொகையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |
| (இ) | 2022 மற்றும் 2023 இல் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வின் போது ஆண்டிற்குரிய முன்னைய ஆண்டின் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றடுகள் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலகளில் 4,579,556 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளைக் கண்டறிந்து பின்னர் அறிக்கையிடப்படும். | மேற்படி |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திமிருந்து கிடைத்த மாற்றங்கள் | 11,662,101 | செலவு பதிவுக்குரிய வரவு பதிவு கணக்கீடு செய்யப்பட்ட முறை | பதிலளிக்கப்பட வில்லை. | சுரியான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீடு கட்டளச் சட்டம் | 2005 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நடப்பாண்டின் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கோரப்பட்டுள்ளது. | முதிப்பீட்டை மேற்கொண்டு புதிய வீதத்தின் பிரகாரம் ஆதன வரி அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைகள் நிதி நிருவாகத்துக்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை | | | |
| | (i) 08 | மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்கள் 28 நாட்கள் தாமதமாகி 2023 மார்ச் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது அவ்வாறு மேற்கொள்ளாதிருக்க கண்காணிக்கப்படும். | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 38 | ஆதனங்கள தடை செய்யும் உத்தியோகத்தர்கள் மூவரினால் 2023 யூன், ஒக்டோபர் மற்றும் திசம்பர் மாதங்களில் 15 சந்தப்பங்களின் போது அறவிடப்பட்ட நிலுவை ஆதன வரி பெறுமதி ரூபா 70,000 தொகை 10 நாட்களுக்கும் 68 நாட்களுக்குமிடையிலான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மேற்கொள்ளாதிருப்பதற்கு கண்காணிக்கப்படும். | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) 83 II | ஊழியர் கடனுக்கான முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்ட்டிருக்கவில்லை. | சீசீ 10 கடன் பதிவேடு, கடன் பேரேடு மற்றும் ஊளியர் கடன் கணக்கு பேணிச் செல்லப்படுகின்றது | மேற்படி. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரிசின் நிதிப் பிரமாண கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 (ஆ) | பல வருட காலமுதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 706,560 பெறுமதியான மதிப்பிழந்த 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பெறுமதி ரூபா 46,821,457 ஆன வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iii) | நிதிப்பிரமாணம் 757 | 23 பற்றாக்குறை மற்றும் தொலைந்தமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ஈ) | 2020 திசம்பர் 03 ஆம் திகதி இலக்கம் LGD/13/2016(i) என்ற உள்ளூராட்சி திணைக்களம் (மேல் மாகாணம்) சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டின் அடிப்படையில் ஜா-எல பேரூந்து நிலைய கடைத்தொகுதி, மத்திய பேரூந்து நிலைய கட்டம் 01 இற்கும் மற்றும் 04 இற்கும் கடை வாடகை அறவிடப்பட்டுள்ளது. மேலும் CBS 422 என்ற கடையை கையளிக்கும் போது கடை வாடகயில் 60 மடங்கான ரூபா 498,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டை பெற்றுக் காள்வதற்கு எதிர்காலத்தில் எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அறவிடப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7.2 வரித் தேவைகளுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் உழைக்கும் போதே செலுத்தம் வரி பெறுமதி ரூபா 402,746 தொகை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | மீதிகள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,022,252 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,423,602 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 88,502,000 | 94,648,751 | 89,841,175 | 90,631,278 | 84,501,500 | 102,621,334 | 70,352,564 | 89,286,429 |
| (ii) | வாடகை | 39,570,000 | 43,970,697 | 41,530,870 | 46,358,622 | 38,670,000 | 40,507,851 | 25,684,786 | 45,108,379 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 9,800,000 | 10,958,152 | 10,958,152 | 648,338 | 5,800,000 | 5,365,608 | 4,974,608 | 717,427 |
| (iv) | ஏனைய வருமானம் | 91,536,000 | 209,484,902 | 217,384,231 | 5,221,813 | 367,411,000 | 464,185,713 | 463,168,538 | 84,503,489 |
| | மொத்தம் | 229,408,000 | 359,062,511 | 359,714,428 | 142,860,051 | 496,382,500 | 612,680,506 | 564,180,496 | 219,615,724 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானத்தை அறவிடும் செயல் முன்னற்ற அறிக்கைக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 142,479,223 ஆன ஒட்டுமொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் நடப்பாண்டின் அறவிடல் ரூபா 93,841,742 ஆனமையால் சேகரிக்கப்பட்ட வீதம் 66 சதவீதமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 176,662,043 ஆன ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தை அறவிடல் ரூபா 65,067,166 ஆனமையால் நிலுவையில் அறவிடப்பட்ட வீதம் 37 சதவீதமாக இருந்தது. | ஆதனங்களை பதிவு செய்தலை தடை செய்கின்ற உத்தியோகத்தர்களை சேர்த்தல், நடமாடும் சேவைகளை நடாத்துதல், ஆதனங்களைத் தடைசெய்தல் மற்றும் கடைகளுக்கு முத்திரை வைத்தல் மூலம் அறவிடப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதனவரியும் வரியும் | | |
| (i) | காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 79,850,570 தொகையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 13,667,261 தொகையும், 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 23,225,705 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 18,974,512 தொகையும், 01 முதல் 03 | 2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போதும் சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் நிலுவை ஆதன வரி வருமானம் சேகரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 13,281,818 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 10,701,273 ஆகவும் காணப்பட்டது. | | |
| (ii) | மேற்கூறப்பட்ட நிலுவைப் பெறுமதி மீதியில் பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 313 ஆதனங்களின் நிலுவை ரூபா 20,109,425 ஆகக் காணப்பட்டது. | வருமானப் பரிசோதகர் உத்தியோகத்தரால் சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (iii) | பிழையாக சிட்டையிடல் இனங்காணப்பட்டிருந்த 09 ஆதனங்கள் மற்றும் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இனங் காணப்பட்ட அசையும் மற்றும் அசைவுறாத 81 ஆதனங்களின் நிலுவை ஆதன வரி பெறுமதி முறையே ரூபா 780,403 மற்றும் ரூபா 7,858,194 என்பன தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | அசைவுறாத ஆதனங்களை தடை செய்யும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மேற்படி |
| (iv) | வருமான சேரிகத்தல் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்திகதியில் உள்ளவாறு நிலுவைகாக இருந்த களியாட்ட வரி மீதி ரூபா 7,639,858 இனால் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,768,462 தொயையில் அறவிடப்பட்ட சதவீதம் 23 சதவீதமும் மற்றும் மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 7,484,091 தொகையில் ஆண்டின் போது சேரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,654,735 ஆனமையால் சேகரிக்கப்பட்ட சதவீதம் 35 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை களியாட்ட வரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் ஆரம்பத்திகதியில் உள்ளவாறு நிலுவை வேலை மற்றும் வியாபார வரி நிலுவை மீதி ரூபா 1,176,190 இனாலும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 329,000 இனாலும் அதாவது 28 சதவீதமான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது. | நிலுவைக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வேலை மற்றும் வியாபார வரி வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | வாடகை | | |
| (i) | வருமானத்தை அறவிடும் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிட்டையிடப்பட்ட வியாபார நிலைய வாடகை பெறுமதி ரூபா 51,323,511 இனாலும் | கடை உரிமையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படுகின்றது. | நிலுவை வியாபார நிலைய வாடகை வருமானம் அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 19,510,255 இனாலும் அதாவது 38 சதவீதம் ஆன குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது. | | வேண்டும். |
| (ii) | காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவைக் கடடை வாடகை மீதி, 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கிடையிலான ரூபா 16,758,012 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலான ரூபா 4,070,808 தொகையும், 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கிடையிலான ரூபா 2,631,000 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 3,272,696 தொகையும் காணப்பட்டது. | கொவிட் பதிவழித்தலையும் கவனத்திற் கொள்ளப்பட்ட பின்னர் இறுதித் திகதியில் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா 26,732,516 ஆகும். | நிலுவை வியாபார நிலைய வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வாராந்த சந்தை வாடகை ரூபா 1,303,647 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாராந்த சந்தை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை இறைச்சிக்கடை கேள்வி வாடகை ரூபா 90,015 அறவிடப்பட்டிருக்க வில்லை. | மேற்படி | நிலுவை இறைச்சிக்கடை கேள்வி வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளாவறு ரூபா 7,318,580 ஆன நிலுவை விருந்தினர் விடுதி வாடகை சேகரித்தல் ரூபா 11,000 ஆனமையால் சேகரிக்கப்பட்ட சதவீதம் 0.2 சதவீதம் ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய சிட்டையிடல் பெறுமதி ரூபா 1,938,652 இனால் எந்தவொரு தொகையில் இருந்து எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தற்போதும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | நிலுவை ஆதன வரி வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (vi) | உடைத்து அகற்றப்பட்ட பொதுச் சந்தையின் 142 கடைகளின் நிலுவைக் கடை வாடகை ரூபா 2,129,775 தொகையும், தற்காலிகமாக கடைகள் வழங்கப்படாத 25 கடைகள் மற்றும் நிலுவைக் கடை வாடகை ரூபா 667,047 உம் காணப்பட்டது. | நிலுவை கடடை வாடகை தொடர்பாக அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (vii) | உடன்படிக்கை செய்யப்பட்ட தற்காலிகமான 25 கடைகளின் நிலுவை வாடகை ரூபா 837,688 | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடன்படிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஏனைய வருமானம் மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,900,985 ஆன நிலுவை வாகன நிறுத்தி வைத்தல் கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டண வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா நகர சபைக்குரிய ஓறுதொட்ட வீதி பிரதான வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் இரண்டு மாடி சந்தைக் கட்டிடத் தொகுதியின் பின்பக்கத்தில் காணப்பட்ட பொது வீதி, 15 அடி அளவிலான அகலத்திலும், 300 அடி நீளத்திலும் உடைய நீர் வழிந்தோடச் செல்லும் வடிகாண் முறைமையை மேவுகை செய்து சந்தை கடைகள் உரிமையாளர் களினால் அனுமதியற்ற வகையில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சபையினால் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அகற்றப்பட்ட பின் பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும். | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றி பொது நடவடிக்கைகளுக்காக வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவின் பிரகாரம் மாநகர சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற 02 சுடலைக் கூடங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப் பணம் பெறுமதி ரூபா 1,664,305 தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1989 சனவரி 20 ஆம் திகதிய இலங்கை சனநாய சோஷலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாக 2022 யூலை 15 ஆந் திகதி பொதுச் சபையினால் | விளம்பர கட்டணம் அறிவட்டு பற்றுச் சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது டன் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படவல்லை | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்தல் பதாதைகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிக்கும் அதிகாரம் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் அத் திகதியில் இருந்து சபையினால் அனுமதிப் பத்திரம் எதுவும் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. நகரத்தின் அழகிற்கு இடையூறான வகையில் மற்றும் பாதுகாப்பின்றிய அறிவித்தல்களை அகற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்காக தேவையான நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | ஜா-எல பேரூந்து நிலை கடை தொகுதியில் 03 மண்டபங்களை வாடகைக்கு வழங்கும் அடிப்படையில் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மதிப்பீட்டின் போது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டமை, 03 மண்டபங்கள் மூடப்பட்டிருந்த போதிலும் சிட்டையிடப் பட்டிருந்தமையினால் சபைக்கு கையளிக்காத கேள்விகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 95,220 தொகை மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்குமாயின் பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டதனால் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியான மதிப்பீடு கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நட்டத்தை அறிவிட்டு சரியான மதிப்பீட்டின் பிரகாரம் முறையான பிரகாரம் கேள்வி கோரப்படல் வேண்டும். |
| (ஈ) | முற்பணம், கடை வாடகைக்கு வழங்குவதற்கு முன்னர் அறவிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை முற்பண மீதி ரூபா 33,324,495 தொகையில் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 22,836,846 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 8,252,649 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே ரூபா 1,945,000 தொகையும், 1 வருடத்திற்கு குறைந்த ரூபா 290,000 தொகையும் அறவிட வேண்டியிருந்தது. | கடைகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை முற்பண வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 34,164,747 நிலுவை முற்பண மீதியில் ரூபா 1,232,498 அதாவது 4 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | மேற்படி |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கடைகளின் உடன்படிக்கையில் 01 ஆம் நிபந்தனைக்கு முரணாக ஏனைய வியாபாரங்களை மேற்கொள்வதற்கும், தமது கடைகள் உடன்படிக்கை நிபந்தனை 7 இற்கு முரணாக மாதாந்த வாடகை அடுத்துவரும் மாத்தின் 10 ஆந் திகதி அல்லது முன்னர் செலுத்தப்பபடாதிருந்தமை, 10 கடைகள் வாடகை உடன்படிக்கையின் 9 ஆம் நிபந்தனைக்கு முரணாக மாற்றப்பட்டிருந்தமை, 42 கடைகள் 2020 திசம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் LGD/211/தி.சுற்றறிக்கை/2020 என்ற சுற்றறிக்கை மற்றும் வாடகை உடன்படிக்கையின் 10 நிபந்தனைக்கு முரணாக உப வாடகைக்கு வழங்கியிருந்தமையும், 31 கடைகள் உடன்படிக்கையின் 21 ஆம் நிபந்தனைக்கு முரணாக நீண்டகாலம் முதல் மூடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்ட போதும் உடன்படிக்கையின் 5 ஆம் நிபந்தனையின் பிரகாரம் கடைகளை கையேற்று மீண்டும் கேள்வி கோரி வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறையான வாடகை உடன்படிக்கை இன்றி 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட CBS V 04 கடைத் தொகுதில் 05 கடைகள் 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சபையினால் இது தொடர்பாக எந்தவொரு வருமானத்தையும் இனங்காண்பதற்கோ அல்லது அறவிடலோ மேற்ொகள்ளப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,280,925 கடை வாடகை வருமானம் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நியாயப்படுத்தும் அறிக்கையொன்றை பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களாக இனங்கண்டு அறவிடல் மேற்கொள்ளப்பட்டல் வேண்டும். |
| (இ) | மத்திய பேரூந்து நிலையத்தின் 01 கட்டம் இலக்கம் 19A என்ற கடைக்காக 2006 ஆம் ஆண்டின் போது சபையுடன் உடன்படிக்கை செய்திருந்த கடை உரிமையாளர் 2013 ஆம் ஆண்டின் போது 05 வருட கால எல்லைக்கு வெளி நிறுவனம் ஒன்றுடன் வாடகை | இது தொடர்பாக இறுதி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | பிரச்சினைகளைத் தீர்த்து நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன் படிக்கை ஏற்படுத்தி நகர சபைக்கு செலுத்துதலை நிறுத்தியிருந்த போதிலும் சபையினால் அந்த நிலைமையை தீர்த்து வைத்து நிலுவை கடை வாடகை மீதி ரூபா 893,335 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 09 ஆம் திகதிய இலக்கம் 5/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் (ii) பிரிவிற்கு முரணாக கம்பஹா மாநகர சபையின் உத்தியோகத்தரால் மாநகர சபையின் 02 வாகனங்கள் 2023 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 13 சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்தப்பட்டிருந் ததுடன் இதன் காரணமாக சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிடுவதற்காக ஓட்ட குறிப்புக்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்டக் குறிப்புக்கள் உள்ளூராட்சி அமைச்சின் விசாரணைப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு வழங்க வேண்டியிருந்தது டன் நட்டத்தை அறவிடல் வேண்டும். |
| (ஆ) | ஜா-எல பேருந்து நிலைய கடைத் தொகுதியில் கூரை உடைந்திருந்தமை, மேல் மாடியில் 03 மண்டபங்கள் மற்றும் 08 கடைகள் நீண்ட காலமாக மூடப்பட்டு இருந்தமை, புறா பறந்து திரிகின்றமையினால் மிகவும் அசுத்தமடைந்து காணப்பட்டது. மூன்றாது மாடியில் அனுமதியற்ற வருகைகளை தவிர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட கதவு மற்றும் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு கடையிலும் வெளியிலும் அனுமதியற்ற பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தது. கடைகளின் கதவு கழற்றப்பட்டிருந்ததுடன் நீர் வசதிகள் மற்றும் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் மலசல கூட முறைமையும் காணப்படவில்லை. | உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை உரிய பிரகாரம் பராமரித்து முறையாக கேள்வி கோரி வழங்கப்படல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக நிறுவனம் தெரிவு செய்த மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1) பிரிவில் குறிப்பிடப்பட்ட சபை நிதியத்திலிருந்து மேற் கொள்ளக்கூடிய கொடுப்பனவுகளுக்கு முரணாக சபை நிதியத்திலிருந்து ரூபா 854,400 செலுத்தப்பட்டு உத்தியோகத்தர்களுக்காக 96 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 48 சேலைகள் உத்தியோகத்தர்களுக்கு | அவதானிப்பு சரியானதாகும். ஊழியர் நலன்புரிகளை நோக்கக் கொண்டு சபை அங்கீகரித்திருந்ததுடன் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கும் வசதிகள் காணப்படாமையினால் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டு ரூபா 427,200 ஆன 48 சாரிகள் நகர ஆணையாளர் அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டமையால் அந்த செலவினமும் பயனற்றதாக இருந்தது. | அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இருந்ததுடன் பயனற்ற செலவினங்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வியாபாரக் கொட்டகை நிர்மாணிக்கும் வேலை 2022 ஏப்ரல் 08 ஆம் திகதி 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்து 56 நாட்கள் கடந்த பின்னர் பல்வேறு காரணங்கள் காண்பித்து நிறைவேற்ற முடியாதிருந்தாக சமூக சபைகளினால் அறிவித்திருக்கும் போது அந்த ஒப்பந்த உடன் படிக்கையை மீறிய அமைப்புக்கள் கறுப்பு பட்டியலில் இடப்படாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மீண்டும் முன்னைய மதிப்பீட்டினை விட ரூபா 1,760,228 அதிகரிக்கும் வகையில் ரூபா 4,254,672 புதிய மதிப்பீடொன்று தயாரித்து முதலாவது உடன் படிக்கையை மீறிய சமூக சபைகளுடன் மேற் கூறப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்கு மீண்டும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | ஸ்வர்ண சஹன சமூக சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதில் இருந்து 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய வேண்டுமென காண்பிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து வேலை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக சபையின் உரிய மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். உடன்படிக்கையை மீறிய சமூக சபைகளை கறுப்பு பட்டியலில் இட்டு மீண்டும் உடன்படிக்கை செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) புதிய உடன்படிக்கையின் பிரகாரமும் நிர்மாணங்கள் 03 மாதங்களில் நிறைவேற்ற வேண்டியிருந்த போதும் ரூபா 1,876,479 ஆன 24 பணிகள் உடன்படிக்கை செய்து ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக இடைக்காலக் கொடுப்பனவு பெறுமதி ரூபா 2,104,014 பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியல் இருந்து 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | பயனற்ற செலவினங்களை பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து அறிவிடல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் சேவைக்காலம் 06 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடையில் 09 உத்தியோகத்தர்கள் சேவை நிலையத்திற்கிடையே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஜா-எல பேரூந்து நிலை கடை தொகுதியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாதிருந்தமையும் அதற்காக நியமிக்கப்பட்ட கட்டுப்பாட்டாளர் எந்தவொரு நிருவாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதி ருந்தமையும் அவர் அதில் இருக்காதிருந்தமை யும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | விற்பனைக் கடைகள் கட்டுப்பாட்டாளரின் மூலம் உரிய சுத்திகரிப்பு நடவடிக்கைகள் உரிய மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பகின்றது. | சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (இ) | சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 46 ஊழியர்களிடமிருந்து கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 1,729,780 நிலுவையாகக் காண்பட்டது. | சேவையை விட்டுச் சென்றவரின் பிணையாளர் இல்லாதிருந்தமையும் 31 ஓய்வுபெற்றுச் சென்றவர்களின் பணம் 2024 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 07 ஊழியர்களுக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 22 ஊழியர்களின் தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. | ஊழியர் கடன் மீதி அறவிடப் படல் வேண்டும். |